அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்.008/2016*
*தேதி.08.01.2016*

# வள்ளியூர் அருகே தனியார் பேருந்து விபத்து சமக தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

*இன்று காலை தனியார் பேருந்து ஒன்று நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் பலியான சம்பவம் நெஞ்சை உருக்குவதாக உள்ளது. தனியார் பேருந்துகள் பல வசதிகளை ஏற்படுத்தியிருந்தாலும், வேகக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். அதே போல் கிளம்பும் நேரத்தில் தாமதமாகக் கிளம்பி, நேரத்தை சரி செய்யும் பொருட்டு பேருந்துகளை வேகமாகச் செலுத்துவதையும் காண முடிகிறது. எனவே தனியார் பேருந்துகள் வேகக் கட்டுப்பாட்டையும், நேரக் கட்டுப்பாட்டையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். இது போன்ற விபத்துகளைத் தவிர்ப்பதில் ஓட்டுனர்களுக்கு முறையான பயிற்சியும் அளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன். பேருந்து விபத்தில் பலியான அனைவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,*
*தலைவர்.*
.